# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 01 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2014. 08. 04 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


## பிரதேச சபை (திருத்தம்)

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 3.00 தபாற் செலவு : ரூபா 5.00

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவிற்கான காப்புவாசகத்தை நீக்குகின்றது என்பதுடன், அத்தகைய நீக்கத்திற்கான சட்டப்பயனானது மேலதிக கவனத்திற்காக பிரதேச சபைக்கான வரவு செலவுத் திட்டம் ஒன்றை அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத் திட்டம் ஒன்றை மீளச் சமர்ப்பிக்கும்போது பிரதேச சபையினால் பின்பற்றப்பட்ட நடவடிக்கை முறையை மீளக் கடைப்பிடிப்பதற்கானதாகும்.*

ச.வ.ஓ. 3 /2014

## 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிரதேச சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவானது அப்பிரிவின் காப்புவாசகத்தை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்